## மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு

முதியோர்களுக்கான தேசிய சபை

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் தற்போது வெற்றிடமாக உள்ள முகாமைத்துவ உதவியாளர் தரம் III தொழில்நுட்பமற்ற 3 பதவிகளுக்கு தகுதியும் அனுபவமும் உள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**1. தகைமை மற்றும் அனுபவம்**

1.1 **வெளிவிண்ணப்பதாரர்களாயின்**

**கல்வித் தகைமை**

க. பொ. த. (சா. /த.) G. C. E. (O/L) சிங்கள மொழி/தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் விசேட சித்தியுடன் இருமுறைக்கு மேல் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (05 பாடங்களில் குறைந்தது ஒரு முறை சித்தியடைந்திருக்க வேண்டும்.)

மற்றும்

G. C. E. (A/L) க. பொ. த. உ/த பரீட்சையில் 03 பாடங்களில் சித்தி பெற்றவர்கள்.

**ஏனைய தகுதிகள்**

கணினி சொல் செயலாக்கம் (டைப்பிங் சான்றிதழ் மற்றும் மேலதிக தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.)

1.2 **உள்ளக விண்ணப்பதாரியாயின்** : முதன்மை தர தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத சேவை பிரிவுகளில் 05 வருட சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

மற்றும்

க. பொ. (சா/த) சிங்கள மொழி/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் விசேட சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 06 பாடங்களில் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

**2.வயதெல்லை :**

18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரியாயின் இந்த வயதெல்லை பொருந்தாது.

3. **சம்பள அளவுத் திட்டம்** : MA 1-1 -2016 ரூபா 27,910.00-10×300-7 × 350-4 × 495-20 × 660-ரூபா 48,540.00

(முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் 02/2016 பிரகாரம்)

**4. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணலில் இருந்து நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக தெரிவு செய்யப்படப்படும்.

இந்த பதவி நிரந்தரமானது என்பதோடு மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு (EPF AND ETF) உரிமை உண்டு மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இது முதியோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான திருத்தப்பட்ட சட்டத்தின் விதிகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது இயற்றப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டது.

மேற்கூறிய தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணபத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். வெளி விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாக அனுப்ப வேண்டும். மேலும் அரசாங்க சேவை, பொது நிறுவனங்கள் மற்றும் சட்ட பூர்வ நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் நிறுவனங்களின் தலைவைர்கள் மூலமாகவும் தங்கள் விண்ப்பங்களை அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபங்கள் 05.02.2024 அன்று அல்லது அதற்கு முன்னதாகப் "பணிப்பாளர் முதியோர்களுக்கான தேசிய செயலகம், இரண்டாம் மாடி, பிரிவு- D செத்சிறிபாய இரண்டாம் கட்டம், பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் "முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளர் பதவி" என்று எழுதப்பட வேண்டும். தெளிவற்ற அல்லது தாமதமாகப் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு நிறுவனம் பொறுப்பாகாது.

முதியோர்களுக்கான தேசிய செயலகம்,
இரண்டாம் மாடி,
டி-தொகுதி,
செத்சிறிபாய இரண்டாம் கட்டம்,
பத்தரமுல்லை,
2024.01.09.

கே. ஜீ. லெனரோல்,
பணிப்பாளர்.